2015 செப்டம்பர் 16]

இந்த ஆண்டு பல்கலைக்கழகத்தின் மூலமாகக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 277, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

277—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

***55082—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், பீமகுளம், நாயக்கனூர் ஆகிய ஊராட்சிகளிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் பீமகுளம் மற்றும் நாயக்கனூர் ஆகிய கிராமங்களை உள்ளடக்கி செயல்பட்டு வந்த பீமகுளம்-ரெட்டியூர் கிராமிய விவசாயக் கூட்டுறவுக் கடன் சங்கம் செயலிழந்த நிலையில், 28-6-1980 ஆம் நாளன்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983, பிரிவு 137-ன்கீழ் கலைக்கப்பட்டது. எனவே, மீண்டும் இந்தச் சங்கத்தினைச் செயல்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், பீமகுளம் கிராமத்தில் உள்ள 708 உறுப்பினர்களுக்கு ரூ.27.21 இலட்சம் நகைக் கடன்களும், ரூ.5.15 இலட்சம் பயிர்க் கடன்களும், அதுபோலவே நாயக்கனூர் கிராமத்தில் உள்ள 619 உறுப்பினர்களுக்கு ரூ.40.16 இலட்சம் நகைக் கடன்களும், ரூ.70.10 இலட்சம் பயிர்க் கடன் உள்ளிட்ட அனைத்துக் கடன் தேவைகளும் ஆலங்காயம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்மூலம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஆலங்காயம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கிளை, சத்திரம்

என்ற கிராமத்தில் உள்ளது. இச்சங்கத்திலிருந்து பீமகுளம் கிராமம் 3 கி.மீ. தொலைவிலும், நாயக்கனூர் கிராமம் 2 கி.மீ. தொலைவிலும் உள்ளது. மேற்படி இரண்டு கிராம உறுப்பினர்களுக்கு, சத்திரம் கிளையில் நகைக் கடன் மற்றும் சேமிப்புக் கணக்கு வசதி மட்டுமே தற்போது வழங்கப்பட்டு வருவதால், இனி வருங்காலங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, சத்திரம் கிளையிலேயே பயிர்க் கடன்களும் வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 278, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

278—

நெல் கொள்முதல் நிலையம்

***5479—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பொன்னேரி தாலுகா, செம்புலிவரம் வட்ட செயல்முறைக் கிடங்கில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, நெல் வரத்து இல்லாத காரணத்தால் அந்த நெல் கொள்முதல் நிலையம் மூடப்பட்டுவிட்டது. எனவே, அங்கு அரசு நேரடி நெல்